# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 119 22-10-1993
இதழ்: 21 விலை ரூபா 5-00


நவயுக சிற்பி — நம்சபை நிறுவுனர்
தந்தை பீற்றர் பியன்வெனு நோஆய் அவர்களின்
**200வது பிறந்த நந்நாளிலே.**

*1793 10 - 27 — 1993 10 - 27*

“ என் ஆன்மா இறைவனையே
ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது,
எம் மீட்பராம் கடவுளை நினைக்கின்றது.”
திருக்குடும்ப கன்னியர் சபையினருக்கு
‘ காவலனின் நல்வாழ்த்துக்கள் ’


University of Jaffna Sri Lanka
RECEIVED
Library


மறைபோதக ஞாயிறு

MISSION SUNDAY

24-10-1993

3ஆம் பக்கம் பார்க்க


※ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ※

மறைபரப்பு ஞாயிறுக்கான திருத்தந்தையின் செய்தி

# வாழ்வின் நற்செய்தியை திருச்சபை அறிவிக்கின்றது

“ நானே வாழ்வு ” (அரு. 14 : 6) என்று கூறிய இயேசு, ஞானஸ்நானத்தின் வழியாக மனிதவாழ்வை இறைவனுடைய சொந்த வாழ்வுடன் ஒட்டவைப்பதன்மூலம் மனித உள்ளத்துக்கு வாழ்வின் மீதுள்ள தணியாத ஏக்கத்தை முழுமையாக நிறைவு செய்யக்கூடியவராயிருக்கிறார்.

நற்செய்திப்பணியில் இளைஞரின் ஒத்துழைப்பு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்று அவசியமாயிருக்கிறது. உலகை மாற்றியமைக்க சிறுவருக்கு ஆற்றலுண்டு என்பதில் திருச்சபை மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளது.

அனைத்துலக மறைபரப்பு ஞாயிறு தினமாகிய இன்று, உலகெங்குமுள்ள விசுவாசிகள் அனைவரையும், முக்கியமாக பெற்றோர், ஆசிரியர், மறையாசிரியர், துறவிகள் ஆகியோரை, சிறுவரை மறைபோதக மனப்பாங்கில் பயிற்றுவது மிக இளவயதில் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதை உணர்ந்தவர்களாய், சிறுவரின் மறைபோதக உருவாக்கலில் விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமது குடும்பம், பாடசாலை, பங்கு ஆகியவற்றால் தகுந்தவிதமாக வழி நடத்தப்பட்ட சிறுவர் தமது வயதொத்தவர்களுக்கும் பிறருக்கும் மறைபரப்பாளராக விளங்கமுடியும். கள்ளமில்லாமாசின்மை, பெருந்தன்மை உடைய இவர்கள் எளிதிற் கிடைக்கக்கூடியவர்களாய் இருப்பதால் தமது சிறிய நண்பர்களை திருமறையை நோக்கி கவரவும், பெரியோரை இன்னும் ஆர்வமுள்ள, மகிழ்ச்சிகரமான விசுவாசத்தின்மீது ஆசைகொள்ளச் செய்யவும் கூடியவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய மறைபோதக உருவாக்கத்துக்கு வேண்டிய ஊட்டம் செபத்திலிருந்து பெறப்படவேண்டும். இறையறிவிலும், சபையுணர்விலும் வளர்வதற்கு வேண்டிய சக்தியை அளிப்பதற்கு செபம் இன்றியமையாததாகும். பெருந்தன்மையோடு பகிர்ந்து கொள்வதன் மூலம், தம்மிலும் வசதி குறைந்த பிள்ளைகளின் இடர்பாடுகளில் தமது இலௌகீகப் பொருள்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இதற்கு வலுவூட்டப்படவேண்டும்.

நற்செய்திப்பணி, மனிதமுன்னேற்றம் ஆகியவைசார்ந்த இருமடியான அர்ப்பணம் குறித்து சிறுவருக்கு உணர்த்தப்பட வேண்டும். இதிலிருந்து புதிய குருத்துவ, துறவற அழைத்தல்கள் மலரும் என்பது என் நம்பிக்கை. ஏனெனில் “மீட்பரின் பணி” என்னும் சுற்றுமடலில் நான் குறிப்பிட்டது போல “பிறருக்கு விசுவாசத்தைக் கொடுக்கும்போது அது இன்னும் வலுவடைகின்றது.” ஆகவே மறைபோதக அழைத்தல்களைக் கரிசனையுடன் பேணி வருவது இன்னும் அவசரமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கின்றது.

காலி மறைமாவட்டம்

## அப்போஸ்தலிக்க நிர்வாகியாக ஆயர் எல்மோ பெரேரா

சிறிலங்காவில் காலி மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாக ஆயர் எல்மோ பெரேராவை நியமித்துள்ளார் திருத்தந்தை.

காலி மறைமாவட்ட ஆயர் ஜோன் சில்வஸ்ரர் உடல் நலக்குறைவின் காரணமாக அம்மறைமாவட்டத்தின் துணை ஆயராக இருந்த ஆயர் பெரேராவை புதிய அப்போஸ்தலிக்க நிர்வாகியாக நியமித்துள்ளார் பாப்பிறை.

1932 ஆம் ஆண்டு மசாம்பேயில் பிறந்த ஆயர் பெரேரா 1960 ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு 1992 ல் காலியின் துணை ஆயராக நியமிக்கப்பட்டார்.

## வத்திக்கானில் நிகழ்ந்தது

200 ஆண்டுகளில் முதல் தடவையாக பாப்பிறை ஒருவர் அசுத்த ஆவியைத் துரத்தும் சடங்கு வத்திக்கானில் 1982 மார்ச் மாதத்தில் இடம்பெற்றதென, கார்தினால் யாக் மார்டீன் எழுதி, அண்மையில் வெளியிடப்பெற்ற புதிய நூலில் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி, செசஸ் நகரைச் சேர்ந்த பிரான்சிஸ்கா வப்றீசி எனும் 22 வயதான பெண்மணியிடமிருந்து அவரின் பங்குத்தந்தை பல்டீனோ அடிகளாரின் முன்நிலையில், திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் வெற்றிகரமாக இச்சடங்கை நடாத்தினார். சாத்தான் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட இப்பெண்மணியுடன், மறுநாள் காலை இறைவனுக்குத் தமது திருப்பலி ஒப்புக்கொடுத்தார் பாப்பரசர்.

## ஆர்வமுள்ளவர்க்கு

புதுப்புனல் வார வினாக்கொத்துகள் பங்கு மக்களுக்குப் போதிய அளவு பிரயோகிக்க முடியாமையால், அவ்வினாக்களுக்குக் கருத்து வழங்க விரும்பும் ஆர்வமுள்ள மக்களின் கையேட்டுப் பிரதிகளை தங்கள் பங்குத் தந்தையின் மூலம் அனுப்பி வைப்பதை வரவேற்கின்றோம்.

செயலர் - D.P.C.

## சீனாவில் அன்னை திரேசா

சீனாவுக்கான தனது முதல் மையத்தைத் தொடக்கும் நோக்குடன் அன்னை திரேசா இச் செவ்வாயன்று பயணம் மேற்கொண்டார். சீனாவின் சங்காய் என்னும் நகரில் ஊனமுற்ற சிறுவர்களுக்கான மையமொன்றை தொடக்கி வைக்கவுள்ளார் அன்னை திரேசா. 100க்கு மேற்பட்ட நாடுகளுக்கு சேவை புரியும்அன்னை திரேசாவின் பிறரன்புக் கன்னியர் சபை இன்று உலகமுழுவதும் 1100க்கு மேற்பட்ட கன்னியர்களையும் 40,000 உடன் ஊழியர்களையும் கொண்டுள்ளது.

## யாழ் நகரில் அ. ம. தி. ஆசிய பிரதிநிதி

அகில உலக அமலமரித் தியாகிகளின் முதல்வரின் ஆசிய பிரதிநிதி, அதி. வண. அஞ்சலிற்றோ லாம்பொன் o. m. i., அடிகளார், ஒரு வார விஜயமொன்றைமேற்கொண்டு செவ்வாய் (19-10-93) அன்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் இங்கு தங்கும் நாட்களில் போர்க்கால இன்னல்கள் மத்தியில் தங்களை அர்ப்பணித்து சேவைபுரியும் வட பிராந்திய அமல மரித் தியாகிகளைச் சந்தித்து அவர்களின் ஆன்ம சக்திக்கு ஊக்கமளிப்பதுடன், மக்கள் படும் துயரங்களை நேரில் கண்டறிவார்.

## அரசுக்கும் மதத் தலைவர்களுக்கும்
குருத்துவக் கல்லூரி அதிபரின்
## துணிவான வேண்டுகோள்

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் 14 வது கல்வி ஆண்டு கடந்த புதன் 13-10-93 அன்று, யாழ். ஆயரும் கல்லூரி வேந்தருமாகிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெற்ற பொது அமர்வில் கல்லூரி அதிபரும் யாழ். மறைமாவட்ட பிரதம குருவுமாகிய அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளார், கடந்த வருட அறிக்கையைச் சமர்ப்பித்து, நாட்டின் இனப்பிரச்சனையைத் தீர்க்க, நிதானமான போக்கையும் உயர்ந்த இலட்சியங்களையும் கடைப்பிடிக்க நாட்டின் அரசுக்கும், இலங்கைத் திருச்சபைத் தலைவர்கட்கும் துணிவுடன் வேண்டுகோள் விடுத்தார்.

துண்டிக்கப்பட்டுள்ள இத்தீபகற்பத்தில் வாழ்வானது மென்மேலும் கடினமானதாகவும், சவால்கள் நிறைந்ததாகவும் மாறிவருகின்றது. முக்கியமாக எம்மைப்போன்ற கல்வி சார்ந்த சமூகங்களுக்கு அது இடர்நிறைந்ததாக உள்ளது. ஆயினும் உண்மையும், நீதியுமே இறுதியில் வெல்லும் என்ற எமக்கேயுரிய கிறிஸ்தவ நம்பிக்கையுடன் எதிர் காலத்துக்கு முகம்கொடுக்க உறுதிபூண்டுள்ளோம்.

அதிகாரம் தேடும் அரசியலுக்கும், பாதுகாப்புடைய இராஜதந்திரத்துக்கும் இடம் கொடாமல், மனிதத்தன்மையுடனும் உயர்பண்புடனும் நடந்து கொள்ளுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் துணிவு இன்னும் எமக்குண்டு. எழுது அடிப்படை மனித உரிமைகளுக்காக பல்லாண்டுகளாகப் போராடி சாவுக்கும் அழிவுக்கும் ஆளான தமிழ் மக்களாகிய எமக்கு, வேறு யாருமல்ல, இந்நாட்டின் சனாதிபதியே இங்கு இனப்பிரச்சனை இல்லையெனக் கூறியுள்ளார். சிங்களவரோ, தமிழரோ, முஸ்லீமோ, இந்நாட்டின் சுயமதிப்புடைய எந்தக் குடிமகனாவது இதை உண்மையென்று ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாதவனாக திறனற்ற அரசானது இப்பிரச்சினையை ஒப்புக்கொள்ள மறுத்து, அதன் ஓர் அண்மைக்கால விளைவாகிய “பயங்கரவாதத்தை” நோக்கியே கவனத்தைத் திருப்புகிறது. இப் ‘பயங்கரவாதமும்’ அரசபயங்கரவாதத்தின் பின்னர் ஏற்பட்டதேயாகும். இவ்வாறாக அரசு மக்களை ஏமாற்றும் ஒரு திட்டத்தை மனதிற் கொண்டுள்ளது. பிரச்சினையை மறுத்து, பயங்கரவாதம்தான் இங்குள்ள ஒரே பிரச்சினை என்று கூறுவதால் அரசுக்கு நிதியுதவியும் போருக்கு ஆயுதங்களும்கிடைக்கும். ஆனால் சிங்களப் படைவீரருக்கும், தமிழ்ப் பொதுமக்கும் இது மேலும் சாவையும் அழிவையுமே கொண்டுவரும். நிதானமான போக்கையும் உயர்ந்த இலட்சியங்களையும் கடைப்பிடிக்கும்படி எமது தலைவர்கள் தூண்டப்படுவார்களாக;


(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## 'நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்'

குடும்பமே ஒரு சமுதாயத்தின் அடித்தளம்; அதே போல் கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையிலும் குடும்பங்கள் சிறப்பிடம் பெறுகின்றன என்பதை விளக்க 2ஆம் வத்திக்கான் சங்கம் 'குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை' என விதந்துரைத்துள்ளது.

திருச்சபை என்பது விசுவாசிகளின் சமூகம்; அது வெறும் மக்கள் கூட்டமல்ல. அன்பு, அமைதி, ஒற்றுமையின் சின்னமாகக் கிறிஸ்துவக் குடும்பங்கள் திகழ வேண்டும்.

குடும்பம் செழிப்புற்றால், நாடு சீர்ப்பட்டு நாளிலும் செழிக்கும். குடும்பம் குலைந்தால், அடித்தளம் சிதைந்து, அகிலமே அழிந்து போகும். இது திருச்சபைக்கும் பொருந்தும்.

கிறிஸ்துவையும் அவரது திருச்சபையையும் அழிக்கத் தேடும் சக்திகள் முதன் முதலில் கிறிஸ்துவ வாழ்வின் தொடக்கப் பள்ளியாகிய குடும்பத்தைத்தான் அழிவின் இலக்குகளாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

ஒரு குடும்பத்தின் பெருமைக்கும், சிறப்பிற்கும் அதன் ஒவ்வொரு உறுப்பினரும் காரணமாக இருக்கின்றனர். நல்ல குடும்பம் என்பது ஒத்த நலமும், ஒற்றுமையும், உள்ளன்பும், உயரிய பண்பும், உறுதியான குறிக்கோளும் உடைய உறுப்பினர்களைக் கொண்டது.

குடும்பத்தின் மாண்பைப் பாதுகாப்பவர்கள் முதலில் பெற்றோர்களே. பெற்றோர் தங்கள் பொறுப்பினையும் கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் உணரவேண்டும். 'குழந்தைகளின் முதல் வேதியர் பெற்றோரே.'

கிறிஸ்துவக் குடும்பம் கிறிஸ்துவப் புண்ணியங்களைக் கற்பிக்கும் ஒரு பள்ளிக்கூடம். பெற்றோர்பால் செலுத்தும் வணக்கம், அன்பு, கீழ்ப்படிதல் போன்ற சீலங்களே பிள்ளைகளின் வாழ்வின் அடித்தளங்களாகும்.

கிறிஸ்துவ இல்லங்கள் இறைவனின் ஆலயமாகத் திகழவேண்டும். குடும்பங்களில் இயேசுவின் திரு இருதயப் படம் (சுரூபம்) வேதாகம நூல் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொருநாளும் குடும்பச் செபம் (செபமாலை) செய்யும் பழக்கம் வேரூன்ற வேண்டும். ''குடும்பச் செபம் ஒரு குடும்பத்தின் வாழ்வில் இவ்வுலகைப் புதுப்பிக்கும் வலுவுள்ள கருவியாகும்'' என்கிறார் எமது திருத்தந்தை. பெற்றோரின் செபம் தங்கள் பிள்ளைகளின் விசுவாச வாழ்வின் வளர்ச்சிக்கு வாய்க்கால்களாக அமையவேண்டும். இதன் விளைவாகப் பிள்ளைகளும் கிறிஸ்துவ மதிப்பீடுகளுடன் உலக வாழ்வில் ஈடுபடப் பழகுவார்கள்.

பெற்றோர் தங்கள் சொல்லாலும், செயலாலும் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையாய் இருந்து, ஏழைகளுக்கு இரங்கும் பரிவு, அறியாமையால் வாடுவோருக்கு உதவி, கிறிஸ்துவை இன்னும் அறியாதவர்களுடன் கிறிஸ்தவ வாழ்வைப் பகிர்தல் ஆகிய பண்புகளுக்குப் பிள்ளைகள் முன் சான்றுபகரவேண்டும். இவ்வாறு எங்கும் அக் குடும்பத்தினர் இயேசுவுக்கும் நற்செய்தி விழுமியங்களுக்கும் சாட்சியமளிக்கும் கத்தோலிக்கராகவாழவேண்டும். பக்தி, ஆழ்ந்த விசுவாசம், பிறரன்பு அருள், இரக்கம், கருணை, விருந்தோம்பல், விட்டுக்கொடுத்தல், இணங்கி வாழ்தல், பணியும் பெருந்தன்மை, குறை மறந்து நிறை போற்றல், நிலை தவறாமை, சொல் தவறாமை, பிறர்மனை நோக்காமை ...... போன்ற நற்பண்புகள் குடும்பங்களில் நிலவினால் அந்தக் குடும்பம் அனைவர்க்கும் எடுத்துக்காட்டான குடும்பமாக அமையும். இவ்வகையான குடும்பங்கள் சமுதாயத்தின் புளிக்காரங்களாக இருந்து சுற்றுச் சார்புகளை சூழ்நிலைகளைத் தூயதாக்க முடியும்.

மனித சமுதாயம் முழுவதற்கும் ஒவ்வொரு குடும்பமும் பொறுப்புள்ளது என்ற விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும். தான் என்ற சுயநல வட்டத்திற் குட்பட்டு வாழாமல், மற்றவர்களின் தேவைகளைப் பற்றிய விழிப்புணர்வு, நீதி, மற்றவர் மீது அக்கறை கொண்டு வாழவும் பயிற்சி பெற்றவர்களை குடும்பங்கள் உருவாக்கவேண்டும்.

பெற்றோர் ஏட்டுக் கல்வியோடு, மறைக் கல்விப் பயிற்சி, பண்பாட்டுக் கல்வி நிரம்பப்பெற்று, அனுபவக் கல்வியிலும் அவர்கள் தேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்துவ இல்லத்திலும் கத்தோலிக்க பத்திரிகைகள், பண்பாட்டுக் கலைக் கருவூலகங்கள் நிறைந்த ''நூலகம்'' ஒன்று இருத்தல் அவசியம்.

மற்றப் பண்புகளைப்போல், தேவ அழைத்தலும் குடும்பத்திலிருந்துதான் அரும்புகிறதென்பதை மனதில் கொண்டு, பெற்றோர் செபத்தினாலும் [illegible] வாழ்வினாலும் நல்ல சூழ்நிலையில் வளரு[illegible]பைத் தங்கள் பிள்ளைகளுக்கு அளிப்பார்களாக!

## திருமறை அறிவை வளர்ப்போம்

## கிறிஸ்தவ கோட்பாடு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. திருவெளிப்பாடு மரணத்தின் பின் சம்பவிக்கக் கூடிய மற்றொரு காரியம்பற்றி அதாவது நரகதண்டனை பற்றியும் கூறுகின்றது. தான் செய்வது இன்னதென அறிந்து கொண்டே கிறிஸ்துவின் வார்த்தையையும் அது அளிக்கும்மீட்பையும்ஏற்றுக்கொள்ள மறுப்பவன், அல்லது அதை ஏற்றுக்கொண்டிருந்தும், அதன் சட்டங்களைத் தொடர்ந்து மீறி அதற்கெதிராகவும் தன் மனச்சாட்சிக் கெதிராகவும் வாழ்பவன், தான் அடைய வேண்டிய பேரின்பத்தை இழந்து, நித்தியகாலமும் இறைவனிடத்திலிருந்து விலகி, துன்பத்துள் ஆழ்ந்திருப்பான். திருநூல் இதற்கு ''இரண்டாவது மரணம்'' என்னும் பயங்கரமான பெயரைக் கொடுக்கின்றது. யாராவது இத்தகைய அபாக்கிய நிலைக்கு உரியவரா என்று ஒருவருமே தீர்ப்பிட முடியாது என்பது வெளிப்படை. அப்படிப்பட்டவர்கள் யாராவது இருக்கிறார்களா, அவர்கள் யார் என்பது இறைவன் ஒருவருக்கே தெரியும்.

4. திருவெளிப்பாடு மற்றொரு நிலையைப்பற்றியும் குறிப்பிடுகிறது. இந்நிலையிலுள்ளவர்கள் மரணத்தின் பின் இறைவனிடமிருந்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிராவிடினும், அவருடன் பூரண ஐக்கியம் பெற இன்னும் தகுதிபெறாதவர்கள். இந்த நிலை ''உத்தரிப்பு ஸ்தலம்'' அல்லது இறைவனுடன் ஒரு பூரண ஐக்கியமான வாழ்வை அடைவதற்கு முன் தூய்மைப்படுத்தப்படும் ஒரு நிலை. இந்த ஆன்மாக்கள் தமது பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று கிறிஸ்தவர்கள் அவர்களுக்காக மன்றாடுகிறார்கள்.

5. காலத்தின் முடிவில், இறைவனது திட்டப்படி வரலாறு ஒரு முடிவுக்கு வரும் போது இயேசு கிறிஸ்து கண்கூடாகக் காணக்கூடிய விதத்தில் மகிமையோடு மீண்டும் உலகுக்கு வருவார். அவர் வரும் நாளையோ வேளையையோ அறிந்தவர் எவருமில்லை. அது மனிதர் எவரும் அறியமுடியாத எதிர்கால இரகசியம். ஆனால் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தில் அது ஏற்கெனவே பிரசன்னமாயிருந்து அவர்களது காத்திருக்கைக்கும் திருச்சபையின் இடையறாத விழிப்புக்கும் தூண்டுதலளிக்கிறது. நாள்தோறும் கிறிஸ்தவர்கள் பக்தியார்வத்துடன் கிறிஸ்துவைவரவேற்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# ம. மே. மா. (D. P. C.) ஞாயிறு சிறப்பு வழிபாடுகள்

### ஒக்ரோபர் 24

**நற்செய்தி அறிவிப்பு ... உரையாடல்**

**முன்னுரை**

இன்று நாம் நற்செய்தி அறிவிப்பு தினத்தைக் கொண்டாடுகிறோம். நாம் ஒவ்வொருவரும் மீட்பு அடைய வேண்டும் என்பது தந்தையினதும் ஒவ்வொரு மனிதனதும் ஏக்கமாகும். இறை உறவு / விசுவாசத்தால் தான் நாம் மீட்புப் பெறுகிறோம். விசுவசிப்பதற்கு இறைவார்த்தை அறிவிக்கப்பட வேண்டும். அறிவிக்கப்படவில்லையெனில் எவ்வாறு கேள்வியுறுவர்? அனுப்பப்படாமல் எவ்வாறு அறிவிப்பர்? இன்று நாம் ஒவ்வொருவரும் எமது வீட்டில் உள்ளவர்களுக்கு, எமது அயலில், எமது பங்கில் உள்ளவர்களுக்கு, சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் நற்செய்தி அறிவிக்க அழைப்பும் பணிப்பும் பெற்றுள்ளோம். எமது உள்ளார்ந்த தூண்டுதலும் யேசுவின் கட்டளையான ''உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்'' என்ற வாக்கும் எம்மை நற்செய்தியை அறிவிக்கத் தூண்டுகிறது. எனவே சாட்சியமாக வாழவும், நற்செய்தி அறிவிக்க ஆர்வமும், ஏற்கனவே எம் மறைமாவட்டத்தில் பணிபுரிபவர்கள் சோர்ந்து போகாமல் பணிபுரியவும் இத் திருப்பலியில் வேண்டுவோம்.

**வாசகம்**

- இசை 2:1–5
- உரோமர் 10:9–18
- மாற் 16:15–20
- சங்கீதம் 97:1–2, 4–6

**மறையுரை:**

( 3 ஆம் பக்கம் பார்க்க )

**விசுவாசிகளின் மன்றாட்டுக் குறிப்புக்கள்**

★ நற்செய்தி அறிவிப்பவர்களான எமது பாப்பரசர், ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் தங்களைப் புதுப்பித்து மற்றவர்களோடு இந்த நற்செய்தியைப் பகிர்ந்து வாழ ...

★ எமது மறைமாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் இறைவார்த்தையில் தாகம் கொண்டு ஆழமான விசுவாச வாழ்வை வாழ ...

★ போரினால் பாதிப்புற்று, பல இழப்புக்களை அனுபவித்து துன்புறும் எம் சகோதரங்களுக்கு பகிர்ந்து வாழும் வாழ்வால் மகிழ்ச்சியின் செய்தியை வழங்க ...

★ இயேசுவின் பெயரில் விசுவாசம் கொண்டு இறைமக்கள் தமக்குள் ஒற்றுமையுள்ள கிறிஸ்தவ சமூகத்தை கட்டி எழுப்ப ...

### ஒக்ரோபர் 31

**பொதுநிலையினர், குடும்பம், இளைஞர்**

**முன்னுரை**

இறைவனின் அளப்பரிய அன்பால் முன் குறிக்கப்பட்டு, இயேசுவின் அரச குருத்துவ, இறைவாக்குப் பணிகளில் பங்குபற்றி, அவருடன் சேர்ந்து உலகை மீட்க பொதுநிலையினராகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாமே திருச்சபை. எம் பணி சிறக்கவேண்டும் என்றால் திருச்சபையின் பெரும்பான்மையாகிய நாம் புதுப்பிக்கப்பட்டு உத்வேகம் பெறவேண்டும்.

இன்றையத் திருப்பலியில் நாம் நிறைவை நோக்கி செல்லும் நம் இளைஞருக்காகவும், நாம் பிறந்துவளர்ந்து உருவாக்கப்பெற்று முதற் பணிபுரியும் அடிப்படைத் தளமாகிய நம் குடும்பங்களுக்காகவும் பொதுநிலையினர் எல்லோருக்காகவும் செபிப்போம்.

இன்றைய உலகில் நமது பணி என்ன? பொறுப்புகள் என்ன என்பதை உணர்ந்தவர்களாக விழிப்படைவோம். நமது திருச்சபை வளர அதன் வழியாக முழு உலகமும் இறை அரசின் பாதையில் முன்னேற, எம் பங்களிப்பை முழுமையாக நல்க இத்திருப்பலியில் குருவுடன் இணைந்து செபிப்போம்.

**வாசகம்**

- இசை. 43 : 8, 10-13, 19-21
- கொலோ. 3 : 12-17
- மத். 19 : 16-22

இளம் வயதினர் குறைவானவற்றை ஏற்கமாட்டார்கள். நிறைவைத்தேடிவந்த வாலிபனுக்கு யேசு ஒரு சவால் விடுக்கிறார். அவ் வாலிபனைப் போலன்று, எம் ஒவ்வொருவருக்கும் அவர் தரும் தனிப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுத்து, நிறைவையடைவோமாக!

**மறையுரை**

( 3 ஆம் பக்கம் பார்க்க )

**விசுவாசிகளின் மன்றாட்டுக் குறிப்புகள்**

★ எல்லா நிலைகளிலுமுள்ள இறைமக்களும் ஒன்றுபட்டு ஒருவரை ஒருவர் மதித்து, உதவி, திருச்சபைப் பணிகளை வலுவுள்ளவையாக்க...

★ நம் குடும்பங்கள் தம் அன்புறவாலும், எடுத்துக்காட்டான வாழ்வாலும் நற்பண்புகளுள்ள பிள்ளைகளை உருவாக்கும் இடங்களாய் மாற...

★ வாலிபன் யேசுவின் வழிசென்று, இளைஞர் ஒவ்வொருவரும் தம் சவால்களை ஏற்று, நிறைவை நோக்கி முன்செல்ல...

★ இளைஞர்முதியோரிடையிலுள்ள இடைவெளி நிரம்பி, உறவு வளர்ந்து, ஆற்றல், அறிவு, அனுபவம், ஒத்துழைப்பு நிறைந்த பணிகள் வளர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைபோதக சபையின்
# மறைமாவட்ட இயக்குனரின் செய்தி

இவ் வையகத்தில் வாழும் நாம் அனைவரும் கிறிஸ்து யேசு சிந்திய இரத்தத்தினால் மீட்பு அடைந்துள்ளோம். அவ்வாறு இருக்க இன்றும் பல கோடி மக்கள் இந்த உண்மையை உணராது கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாது வாழ்கிறார்கள். இதைக் கண்டும் கிறிஸ்தவர்களாகிய நாம் வாழா இருப்பது பெரும் தவறாகும்.

இதனால் தான் திருச்சபை வருடாவருடம் மறை - அறிவிப்பு ஞாயிறு தினத்தை கொண்டாடுகின்றது. இது இவ்வருடம் வரும் 24 ஆம் திகதி ஞாயிறு அன்று எமது மறை மாவட்டத்தில் கொண்டாடப்படுகின்றது.

மறை அறிவிப்பு ஒவ்வொரு கிறிஸ்தவனின் தலையாய கடமை. அவனது கிறிஸ்தவ அழைப்போடு இயல்பாகவே இணைந்து நிற்கும் ஒரு பொறுப்பு. ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல் என்ற அருள் அடையாளங்கள் ஊடாக மறை அறிவிப்புக்காக அவன் அர்ச்சிக்கப்படுகிறான். தந்தையாகிய இறைவன் எவ்விதம் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினாரோ அதுபோல இன்று கிறிஸ்தவனும் உலகிற்கு அனுப்பப்படுகிறான், கிறிஸ்துவுக்கு சான்று பகர.

"புதுப்பிக்கப்பட்ட பகிர்ந்து வாழும் திருச்சபையாக" எம் மறைமாவட்டத்தை உருவாக்க புறப்பட்டு இருக்கும் நாம் அனைவரும் முதன்மையாக எமது வாழ்வின் மாதிரிகையாலும் வார்த்தைகளின் சான்றாலும் மறை அறிவிப்புப் பணியில் ஈடுபாடு கொள்வோம். "நீங்கள் உலகின் ஒளி: உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக" என்ற யேசுவின் போதனை என்றும் எம் கண்முன்னே இருப்பதாக.

எனவே வையகத்தின் மட்டில் எமக்குள்ள பொறுப்பை உணர்ந்து கொள்வோம். அனைவரும் கிறிஸ்துவை ஏற்று அவரில் புதுப்பிக்கப்பட நாம் அக் கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து வாழ்ந்து மறை அறிவிப்புப் பணியில் ஈடுபடுவோம்.

அருட்திரு. றெஜீ இராஜேஸ்வரன்
யாழ். மறைமாவட்டமறைபோதகச் சபை
இயக்குனர்

# நற்செய்திப்பணி - கிறிஸ்தவ ஒன்றிப்பு - உரையாடல்

**நற்செய்தி என்றால் என்ன?**

நற்செய்தி என்பது மகிழ்ச்சிகரமான மங்களகரமான செய்தியைக் குறிக்கிறது. ஒரு ஆளுக்கு நேரிலோ மறைமுகமாகவோ மகிழ்ச்சியை சுதந்திரத்தை, உறவின் இணைப்பை, உடல்உளநலனை, வெற்றியை சாதனையை வழங்கக் கூடிய எந்தச் செய்தியும் ஒரு நற்செய்தியே. இறைவன் மனித வரலாற்றில் மனித மீட்புக்காய், முழு மனித விடுதலைக்காய் பங்கேற்பதை — வரலாற்றுத் தொடக்க முதல் நிறைவேறி வரும் மீட்புச் செயல் தன்னில் முழுமை பெறுவதை விசுவசிக்க அழைப்பதே நற்செய்தி.

**இயேசுவே ஒரு நற்செய்தி**

இறைத் தந்தை தன் அன்பை தம் மகன் கிறிஸ்துவிடம் கொடையாக கொடுத்து அனுப்பினார். கிறிஸ்துவை அணுகிய / ஏற்ற அனைவரையும் இவ் அன்பு பாதித்தது, ஆட்கொண்டது. இவ் அன்பு அவர்களை உடல் நோயில் இருந்தும், மனவேதனை, கவலையிலிருந்தும், குற்றப்பணி உணர்வு பாவத்திலிருந்தும் இயற்கை சாத்தானின் பிடியிலிருந்தும், பதவி பொருள் ஆசையிலிருந்தும் விடுவித்தது. இதனால் அவர்களுக்கு இயேசு ஒரு நற்செய்தியாக, மகிழ்ச்சியின் செய்தியாக இருந்தார். இது அவர்களை ஒரு புதிய உறவிற்கு இட்டுச் சென்றது. எல்லாவற்றிலும் மேலாக, யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு துன்புறும் மனிதனுக்கு உயர்ந்தவொரு நற்செய்தியாக அமைந்தது.

**அப்போஸ்தலர்**

இயேசு தமது பணியை தொடர்ந்து ஆற்ற அப்போஸ்தலர்களை தெரிந்தெடுத்தார். வாக்களித்த ஆவியை அப்போஸ்தலர்கள் பெற்றதும் புதிய ஆற்றலை, திட்டத்தைப் பெற்று உத்வேகத்தோடு இயேசுவின் நற்செய்தியை மக்களுக்கு பறைசாற்றவும் அதனால் ஏற்பட்ட துன்பத்தை ஏன் மரணத்தை முதலாய் எதிர்கொள்ளவும் அவர்கள் துணிந்தார்கள்.

**புனித சின்னப்பர்**

புனித சின்னப்பர் "தமஸ்கஸ்" நோக்கி செல்லும்போது கிறிஸ்துவின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மனித நேயத்தை புறவினத்தாரிடம் வளர்க்க யூதர்களோடு போராட வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் பாடுகள் மரணம், உயிர்ப்பையே மையமாகக் கொண்டு அவரது போதனை அமைந்தது. இதனை மக்களின் வாழ்வில் பல நிலைகளில் எடுத்துக் கூறியது அவர்களிற்கு ஒரு நற்செய்தியாக மாறியது.
[2 கொ 5 / 19, கொ 11 / 23, எபி 9 / 12 உரோ 3 / 12]

**நாமும் ஒரு நற்செய்தியாளர்**

நாமும் புதுப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவை அனுபவித்தால் தான், மற்றவர்களுக்கும் இந் நற்செய்தியை கொடுக்கலாம். நாம் எம் வாழ்வில் சீர்குலைந்து, பல வித இழப்புக்களால் துன்பப்பட்டு, அங்கலாய்ப்பு, குழம்பியநிலை, நோயால் வாடுகின்ற பலரை சந்திக்கின்றோம். இவர்களுக்கு நாம் நற்செய்தி கொடுப்பதாய் இருந்தால் நம்மில் சில பண்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

1. உற்று நோக்கல் (நல் நோக்கப் பார்வை)
2. ஏற்றுக் கொள்ளல் (உண்மை அன்பு)
3. பகிர்தல் (தியாகம்)

ஆகவே நாம் பிறருக்கு நற்செய்தியை கொடுக்கும் போது பார்வையில் கனிவு, சொல்லில் பரிவு, இதயத்தில் இரக்கம், கைகளில் உதவி, கால்களில் வேகம் தேவை. இப்படியாக நாம் நற்செய்தியாளராக செயற்படும் போது பிரச்சனைகள், எதிர்ப்புகள், சவால்களை சந்திக்க வேண்டிவரும். அவற்றையும் ஏற்று ஒளியூட்டலும், வழிகாட்டலும் நமது பொறுப்பாகும்.

**நற்செய்தி பணி யாருக்கு?**

1. ஜெருசலேம் → எமது வீட்டில்
2. யூதேயா → அயலவருடன்
3. சமாரியா → எமது பகைவருடன்
4. உலகஇறுதி எல்லை → சந்திக்கும் அனைவருடனும்

**கிறிஸ்தவ ஒன்றிப்பு**

தற்காலம் எமது மக்கள் மத்தியில் கிறிஸ்துவின் பெயரால் பல சபைகள் இருப்பதை நாம் காண்கிறோம், "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்று இயேசு செபித்தார் (அரு 17 / 21). பிரிவினைச் சபை என்று வெறுப்போடு நோக்காது. குறைகளை மட்டும் பார்க்காமல், செவிமடுத்தல், திறந்தமன உரையாடல், அவர்களிடம் உள்ள நன்மையானவற்றை காணல், இவை மூலம் எமக்குள் ஒன்றிப்பை ஏற்படுத்துவதே எமது கடமையாகும்.

**உரையாடல்**

படைப்பு கடவுளுக்கு புறம்பானதல்ல. "அவர்கட் புலனாக கடவுளின் சாயல் படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர்" (கொலே 1 / 15), (பிலி 2/ 6). படைப்பு கடவுள் தன்மையை கொண்டுள்ளது. எனவே மற்றைய சமயங்களை வெறுப்போடு நோக்காது உறவாடலின் மூலம் தந்தையின் திட்டமாகிய விண்ணில் உள்ளவை மண்ணில் உள்ளவை அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்றிணைத்து (எபே 1 / 9, 10) தோழமையும், அன்பும், நீதியும் சமாதானமும் கொண்ட ஒரு சமூகத்தை கிறிஸ்துவில் கட்டியெழுப்ப அழைக்கப்படுகிறோம்.

# திருச்சபையில் பொதுநிலையினரின் பங்கு

ஆட்கள் மூவராயிருந்தும் முற்றிலும் ஒருமைப்பாடுடைய சமூகமாக இறைவன் இருக்கிறார். அவர் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனும் சமூகத் தன்மை நிறைந்தவன். எம்முள் பல் வேறு அடிப்படையிலான சமூகக் குழுமங்கள் உள. மறை அடிப்படையில், கிறிஸ்துவால் அழைக்கப்பட்டதையும், அவரின் பணிக்கென அனுப்பப்பட்டதையும்உணர்ந்து, பாப்பரசரின் தலைமையில் ஒன்றுகூடி வாழும் சமூகமே கத்தோலிக்க திருச்சபை.

ஒவ்வொரு மனிதனும் இறைவனை இறுதிநோக்காகக் கொண்ட அவரின் அன்புப் பிள்ளை. தவறும் போதும் கைவிடப்படாமல் மீட்கப்படுபவன். அவரின் படைக்கும், மீட்கும் பணிகளை பொறுப்புடன் தொடர்ந்து ஆற்ற அவரால் பணிக்கப்பட்டவன். எனவே தனிப்பட்ட முறையிலும் மாண்புமிக்கவன்.

ஒரு சமூகத்தில் பல்வேறு பணிகளுக்கு வெவ்வேறு ஆட்கள், குழுமங்கள் இருப்பது போல் திருச்சபையிலும் பணி சார்ந்த வேறுபாடுகள் இருக்கின்றன—இருக்கவும் வேண்டும். ஆனால் உறுப்பினர் தன்மை, உரிமை, புறவாழ்வு ஆகியவற்றில் எல்லோரும் சமமானவர்கள். எல்லோரும் கூட்டுப் பொறுப்போடும், சகோதர சிந்தையோடும் கைகொடுத்தால்தான் திருச்சபையும் அதன் பணியும் சிறக்கும்.

யேசுவைப்போல் அதுவும் இரு பண்புகளைக் கொண்டது. மனிதர்களாலான புனிதசபை. நாளடைவில் மனித பண்புகள் மிதமிஞ்சித் தலை தூக்கி, அதன் புனிதத்துவத்தையே மறைத்து சீரழிவுகளைப் புகுத்தின-ஒற்றுமையின்மை, ஏற்றத் தாழ்வு, போட்டியும் தொடர்ந்து தற்காப்பு முறைகள், சட்டங்களும் புகுந்தன. விளைவு : பொதுநிலையினரிடையே நிலவும் பாகுபாடுகள்; 1 / 1000 விகிதத்தினரால் ஆளப்பட்டு, அவர்களே திருச்சபை என்ற நிலை மேலோங்கியது. அதைப்பற்றித் தீர்மானித்தல், அதை நிர்வகித்தல். பொது நிலையினரிடமிருந்து சேகரிக்கப்பட்ட அதன் சொத்துக்களைப் பராமரித்தல் போன்ற யாவும் ஆயர்களின் உரிமைகளாயின. இறையியல் கூட அவ்வழியே வளர்ந்தது. இவை போன்றவற்றின் விளைவாகவே மத்திய காலத்தில் பிரிவினைச்சபைகள் உருவாகின.

புரட்சிகரமான 2 ஆம் வத். சங்கத்தில் கொள்கையளவில் இந்நிலை மாற்றப்பட்டது. இறைமக்களே திருச்சபை; உலகுக்குப் பணி செய்யவே அது உள்ளது; பொது நிலையினருக்குப் பணிபுரியவே குரு நிலையினர் உளர்; யேசு சீடரின் கால்களைக் கழுவிப் பணி செய்தது போன்றதே குருத்துவ தலைமைத்துவம் என்ற நிலைப்பாடுகள் வலியுறுத்தப்பட்டன.

ஆனால் இவை எவ்வளவிற்கு உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? இன்றும் இரண்டாந்தர உறுப்பினராகக் கணிக்கப்பட்டு, கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவும், கொடுக்கப்படுவதைப் பெறுபவர்களாகவும் நாம் இல்லையா? முடியுமானவரை மதிக்கப்பட்டு, எமது ஆற்றல்கள் ஏற்கப்பட்டு, பொறுப்போடு கலந்தாலோசிக்கப்படுகின்றோமா? "நாமே திருச்சபை; அதன் மட்டிலும், அதன் வாழ்வு, பணிகளிலும் நாமும் பொறுப்புக்களும் உரிமைகளுமுடையவர்; நாம் சூழலுக்கேற்ற பணிகளை நாமாகவே நினைத்து, வடிவமைத்துச் செயற்படுத்தும் கட்டுப்பாடும் உரிமையுமுடையவர்கள்" என்பதை உணருகிறோமா? அதற்கான உற்சாகமும் உந்துதலும் கொடுக்கப்படுகின்றனவா? அல்லது தடைகள் போடப்படுகின்றனவா? திருச்சபையின் (அதாவது எமது) சொத்துக்களைப்பற்றி அறியவும், பங்கீடு செய்யவும் நிர்வகிக்கவும் எமக்கு எவ்வளவிற்கு இடமுண்டு?" எனச் சிந்திப்போம்.

எமது கலந்துரையாடல்கள் சிந்தனைகள், கோரிக்கைகள், முடிவுகள் மூலம் சகலரும் மதிக்கப்பட்டு பொறுப்புள்ளவர்களாக உணரக்கூடிய சபையாக மாறமுயல்வோம். அன்றேல் வர்க்கப்பாகுபாடு தொடர்ந்து வளர்ந்து, பணிவலுவற்றதாகும், நோய் பரவிப் பாதிப்பு ஏற்படும். எம் நேரிய சிந்தனைகள், தீர்மானங்களால் இறைஅரசு வளர வழிவகுப்போம்.

அ. சந்தியாப்பிள்ளை

# குடும்ப வாழ்வு ஒரு பயணம்

ஆரம்பத்தில் திருமணம் குடும்பங்களுக்கிடையேயும் குலங்களுக்குள்ளேயும் ஒரு ஒப்பந்தமாக இருந்தது. குடும்பங்கள் பெருகிக் குலம் நிலைக்க திருமணம் இன்றியமையாத ஒன்றாக இருந்தது. இன்று இந்த நிலை எவ்வளவோ மாற்றம் கண்டு திருமணம் என்ற நிகழ்வு மனித வாழ்விலே "உடன்படிக்கை" என்ற நிலைக்கு உயர்ந்திருக்கிறது. ஆண் — பெண் என்ற உறவு உடன்படிக்கையினால் ஆன ஒன்று. இந்த "உடன்படிக்கை" என்ற வார்த்தை வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டது. இறைவன் சீனாய் மலையடிவாரத்திலே இஸ்ராயேல் மக்களுடன் ஓர் "உடன்படிக்கை" செய்து கொண்டார். இதன்படி இறைவனும் மக்களும் பிரமாணிக்கம் தவறாமல் ஒருவரைஒருவர் அன்பு செய்ய வேண்டும். திருமண உறவும் இதைத்தான் குறிக்கின்றது.

இந்த உறவில் கணவன் மனைவி வளரும்போது அவர்கள் "நான்" என்பதை விடுத்து "நாம்" ஆக மாறுகின்றனர். அவர்கள் "நாம்" ஆக மாறுகின்ற போது "இவள் என் எலும்புகளின் எலும்பும். மாமிசத்தின்மாமிசமுமாய் இருக்கின்றாள்" என்றும் "இருவரும் ஒரே உடலாக இருப்பார்கள்" என்ற அனுபவமும் கொண்டு விளங்குவார்கள். ஆனால் இது திருமண நாளன்றோ அல்லது ஓரிரு வருடத்திலோ "நான்" "நாம்" ஆக மாறமுடியாது. இது ஒரு தொடர்ச்சியான வாழ்வின் அனுபவமாக இருக்கின்றது. திருமணம் முடித்தநாள் தொடக்கம் இறக்கும் வரை நெருங்கிய உறவை நோக்கி வளருகின்ற ஒரு அனுபவமாகவும் இருக்கின்றது.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ப்புப் பணிக்கான மாநாடு

## பண்பாடும் திருச்சபையும்

★ சந்திரன்

இன்று எமது கத்தோலிக்க மக்கள் மத்தியிலே பண்பாட்டுமயமாக்கல் தொடர்பாக பலத்த சந்தேகம் நிலவுகிறது. பண்பாட்டுமயமாக்கல் என்ற பெயரிலே எமது திருச்சபையின் தனித்துவம் இழக்கப்பட்டு இந்துமயமாகி விடுமோ என்று பலர் பயப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இவ்விடயம் அதன் முழுமையான தாற்பரியத்தோடு புரிந்து கொள்ளப்படாமையும் அதன் விளைவாக வழிபாட்டில் மட்டும் ஒரு சில பண்பாட்டு அம்சங்கள் வலிந்து புகுத்தப்பட்டு வருவதுமாகும். பண்பாட்டு மயமாக்கலின் உண்மை அர்த்தத்தைப் புரிந்து கொண்டாலன்றி அதன் அவசியத்தை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**பண்பாட்டு மயமாக்கல் ஒரு இறைசித்தம்.**

முதன்முதல் பண்பாட்டு மயமாக்கலில் ஈடுபட்டவர் இறைவனே ஆவார். மனிதனுக்கு விடுதலை அளிக்கச் சித்தங் கொண்ட இறைவன் தமது திருமகனை முற்றிலும் மனிதனாக்கினார். இவ்வாறு மனிதனான இறைமகன் மனிதத்தின் முழுமையையும் இறைசித்தத்திற்கேற்ப வாழ்ந்ததினால் மனிதத்துவத்திற்கு மீட்பளித்தார். ஆகவே திருச்சபை இயேசுவின் வழிநின்று மனுக்குலத்தை மீட்க உழைக்க வேண்டுமானால் தானும் ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆழ்ந்து இறங்கி அதற்கு மீட்பளிக்க முயல வேண்டும்.

**பண்பாட்டுமயமாக்கல் - திருச்சபையின் வரலாறு.**

திருச்சபை பிறந்தது யூதமரபிலே, ஆயினும் அது யூத பண்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு புறவினத்தாராக இருந்த கிரேக்கரது பண்பாட்டினுள்ளே தன்னைப் புதைத்துக் கொண்டதை நாம் அப்போஸ்தலர் பணி நூலிலே படிக்கின்றோம். பின்பு அது உரோமைய பேரரசிலே பரவத் தொடங்கிய போது உரோமைய பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிக் கொண்டது. பின்பு படிப்படியாக ஐரோப்பியமயமாகியது. இவ்வாறாக திருச்சபை எங்கு சென்றாலும் மாறாப் பொருளான கிறிஸ்தவ விசுவாசத்தைக் கைவிடாமல் அதன் இயங்கு தளமாகிய பண்பாட்டை மாற்றியே வந்தது இதனால் தான் ஒரே உரோமன் கத்தோலிக்க திருச்சபையினுள்ளேயே வெவ்வேறு சடங்கு முறைகளை (rites) கொண்ட சபைகள் இருத்தல் சாத்தியமாயிற்று (உ+ம்: கீழைத்தேச சபைகள்).

**எமது கதை**

எமக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைக் கொண்டு வந்தவர்கள் லத்தீன் சடங்குமுறையைச் சார்ந்த உரோமக் கத்தோலிக்க மறைபரப்பாளர்களாரும். இங்கு வந்த அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தை எமது சொந்தப் பண்பாட்டிலே தர பல தடைகள் இருந்தன அதில் முக்கியமானது தமிழ்ப் பண்பாடும், இந்து சமயமும் இரண்டறக் கலந்திருந்தமையாகும். ஐரோப்பியரான அம்மறைபரப்பாளருக்கு இவ்விரண்டையும் பிரித்தறியும் அறிவும் இருக்கவில்லை; ஆர்வமும் இருக்கவில்லை. [இத்தகைய முயற்சியில் இறங்கிய ரொபேட் டிநொபிலி (தத்துவ போதகர்) போன்றோர் புறநடை] அதனால் அவர்கள் தமக்குப் பரிச்சயமாயிருந்த ஐரோப்பிய பாணித் திருச்சபையையே இங்கும் அமைத்தனர். அங்கிருந்தது போன்று அதே கோயிலைக் கட்டினர்; அதே சடங்குமுறையை அறிமுகப்படுத்தினர். அதே வாழ்க்கை முறையையும் எமக்குக் கற்றுத் தந்தனர். எமது பகுதிகளின் இத்தகைய ஒரு புதிய வகுப்பைத் தோற்றுவிப்பது அவர்களுடைய காலனித்துவ நலன்களுக்குச் சாதகமாயிருப்பது அவர்கள் இத்தகைய மறைபரப்பை விரும்பியதற்கு இன்னுமொரு காரணமாகும். இதன்விளைவாக தமிழ்க் கிறிஸ்தவர்களாகிய நாம் சொந்த மண்ணிலேயே அந்நியர்களாக்கப்பட்டோம்.

**2. ஆம் வத்திக்கான் சங்கம்**

இந்நிலையில் 2 ஆம் வத்திக்கான் சங்கமூடாக திருச்சபையின் ஆசிரியம் அப்போஸ்தலர் காலத்தில் யெருசலேம் சங்கம் செய்ததை ஒத்த ஒரு புதுமையைச் செய்தது உரோமன் கத்தோலிக்க திருச்சபையை உலகப் பண்பாடுகளுக்குத் திறந்து விட்டது. ஒவ்வொருவரும் தத்தமது பண்பாட்டிலே கிறிஸ்தவ மக்களாயிருக்க அனுமதியும் தந்து அழைப்பும் விடுத்தது. சங்கத்தின் இவ்வழைப்பானது எமக்குப் பெரும் சவாலை விடுத்து நிற்கின்றது.

**எமது பணி**

சொந்த மண்ணிலேயே அந்நியர்களாகி நிற்கும் எமது பரிதாப நிலை நீங்க வேண்டும். நாமும் மண்ணின் மைந்தராகி தமிழ்க் கிறிஸ்தவர்களாக வாழ வேண்டும். இதற்கு நாம் எம்மை சொந்த மண்ணின் வாழ்வுத் தன்மையிலிருந்து பிரிக்கும் அனைத்துக் காரியங்களையும் அடையாளங் கண்டு அவற்றை விலக்க வேண்டும். எமக்கே உரிய வாழ்க்கை முறையை (பண்பாட்டை) மீளத்தரிக்க வேண்டும். அப்போது தான் நாம் புளிக்காரமாகச் செயற்பட்டு எம்மண்ணிற்கு விடுதலை அளிக்க முடியும். இதைச் செய்யும் போது நாம் சில விடயங்களை அவதானிக்க வேண்டும்.

— பண்பாடென்பது என்றும் நிலையாயிருப்பதல்ல, மாறாக காலத்துக்குக் காலம் மாறிச் செல்லும் ஒரு மெய்மையாகும். ஆகவே பண்பாட்டு மயமாக்கல் என்பது கால ஓட்டத்திற்கு எதிராக நடத்தப்படும் புதைபொருள் ஆராட்சியல்ல.

— வழிபாட்டில் பண்பாட்டின் வெளி அடையாளங்களை வலிந்து (பொருள் கொடுத்தாயினும்) புகுத்துவதுதான் பண்பாட்டுமயமாக்கலல்ல. திருச்சபைமுழுமையையும்பண்பாட்டுமயமாக்கும் தொடர் முயற்சியின் படிமுறை வெளிப்பாடாகத்தான் வழிபாட்டில் பண்பாட்டம்சங்கள் வெளிப்பட வேண்டும்.

இன்று எமது பண்பாட்டின் முக்கிய அம்சங்களாக இருப்பவை வறுமை, துன்பம் போன்ற மெய்மைகளாகும். ஆகவே ஏழைத்திருச்சபையாக மாறுவதும் இப்பண்பாட்டிற்கு மீட்பளிக்க திருச்சபை செய்ய வேண்டிய அவசர செயற்பாடுகளாகும். இத்தகைய ஆழமான ஒருங்கிணைக்கப்பட்ட பண்பாட்டுமயமாக்கல் பார்வைக்கு இம்மாநாடு எம்மை அழைத்துச் செல்லுமா?

# சவால்களை எதிர்கொள்ளும் இளைஞர்

நற்செய்தியிலே காணப்படுகின்ற பணக்கார வாலிபன் (மத். 19 : 16–22) இளைஞர் சமுதாயத்தின் பிரதிநிதியாக ஆண்டவன் முன்னிலையில் நின்று ''என்னிடத்தில் இன்னும் குறைவாயிருப்பதென்ன?'' என்று வினவுகின்றான். ஒவ்வொரு இளைஞனுடைய உள்ளத்திலும் எழுந்து கொண்டிருக்கின்றகேள்வி இது. அவன் நிறைவைக் காணவேண்டிய பாதையை இயேசு சுட்டிக்காட்டிய போது, "உனக்குள்ளதெல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு'' என்று கூறிய போது அந்த சவாலை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாமல் போகவே வாழ்க்கையிலே தோல்வி அடைகிறான். ஒவ்வொரு இளைஞனும் தன் வாழ்வின் குறைவு எது என்பதை கண்டு கொள்ளவேன்டும். அந்தக் குறைவிலிருந்து நிறைவு அடைவதற்கு அவன் எதிர் கொள்ள வேண்டிய சவால்கள் என்ன என்பதையும் இனங்கண்டு அந்த சவால்களிலே வெற்றி கொள்ள வேண்டும். குறைவோடு வாழ நாம் விரும்பவில்லை என்பது தான் இன்றைய இளைஞர்களின் அர்ப்பணம் நிறைந்த போராட்டத்துக்கு அடிப்படைக் காரணமாகும் என்பது மறுக்க முடியாதது.

ஆனால் இந்தக் குறைவுகள் நிறைவாக வேண்டிய சவால்களை எதிர்கொள்ளும் இளைஞன் நற்செய்தியின் மதிப்பீடுகளுக்கு இடங்கொடுத்து செயல்பட வேண்டியது அவன் எதிர் கொள்ளுகிற முக்கியமான சவாலாக இருக்கிறது. நேர்மையாக, தூய்மையாக இல்லாமல் குறுக்கு வழிகளில், வன்முறைகளில், பலாத்காரங்களில் அவன் நிறைவைக் காண எத்தனித்தால் அவன் நிறைவு அடைந்தாலும் மீண்டும் அது அவனைக் குறைவோடு தான் வாழ வைக்கும் என்பது உண்மை.

அனுபவம் செறிந்த அறிவு கொண்ட பெரியோர்களின் வழிகாட்டல்களுக்கும் இளைஞர் தப்மை விட்டுக் கொடுப்பது அவர்கள் நிறைவு காணும் வழியை இலகுவாக்கும்.

இளைஞர்களின் ஆற்றல்கள் இனங்காணப்பட திருச்சபை அவர்சளுக்குஉதவியாகஇருந்து அவர்களின் குறைவு என்ன என்பதையும் அவர்கள் நிறைவு காண எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்ன என்பதையும் சுட்டிக்காட்டி இவர்களை பலன் கொடுக்கும் இளைஞர்களாக்க தன்னால் இயன்ற பணி புரிந்தால் அதே இளைஞர்களின் சக்தியால் திருச்சபையும் செழிப்புற வளரும் என்பதில் சந்தேகமில்லை.

திருச்சபை எனக்கு என்ன செய்கிறது என்பது ஒவ்வொரு இளைஞனும் கேட்கின்ற ஒரு நியாயமான கேள்வியாக இருந்தாலும் நான் திருச்சபைக்கு என்ன செய்கிறேன் என்பதும் அவன் கேட்கவேண்டிய இன்னொரு நியாயமான கேள்வி தான்.

ஒவ்வொரு கிறீஸ்தவ இளைஞனும் தன்னைப் புதுப்பித்து அதன் வழியாக புதுப்பிக்கப்படும் திருச்சபையின் வழிநடத்தலினால், உலகினை புதுப்பிக்க முனைகின்ற இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் புளிக்காரங்களாக வாழும் போதுதான் தான் கிறீஸ்தவ இளைஞன் என்பதை வாழ்க்கையினால் சொல்ல முடியும்.

## திருமறை அறி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

6. அப்போது தான் மனிதன் எதற்காகப் படைக்கப்பட்டானோ அந்த மகிமை நிலையை இறைவனில் அடைந்து கொள்வான். மனிதத்தன்மைக்கு மேற்பட்ட இந்த அனுபவத்தை விவரிப்பதற்கு மனிதமொழிக்கு ஆற்றலில்லை. ஆனால், வேதாகமம் இதை விளக்க அநேக உருவகங்களையும் அடையாளங்களையும் தந்துள்ளது. அப்போது உலகளாவிய ஓர் உயிர்த்தெழுதல் இருக்கும். நீதிமான்கள் உயிர்த்த கிறிஸ்துவின் உடலைப் போன்று உருமாற்றம் பெற்ற உடலோடிருப்பர். மகிமைபெற்ற இவ்வுடல் உலக வாழ்வின் குறைபாடுகளிலிருந்து நீங்கப்பெற்றதாய், ஒவ்வொருவரது ஆளுமையையும் முழு அழகுடன் பூரணமாக வெளிப்படுத்துவதாயிருக்கும். நீதிமான்கள் அடையும் மகிமையும் ஆனந்தமும் இறைவனது கொடைகளையும், அக்கொடைகளின் மட்டில் ஒவ்வொருவரது ஒத்துணர்வையும் பொறுத்ததாகும். பாவமும் மரணமும் நிரம்பிய இவ்வுலகம் மறைந்து விடும். ''புதிய வானகமும் புதிய வையகமும் தோன்றும்'' (திருவெளி21 : 1), ''கடவுளுடைய மாட்சிமை அதற்கு ஒளிவீசும்'' (திருவெளி 21:23), ''கடவுள் அனைத்திலும் அனைத்துமாய் இருப்பார்'' (1கொரிந். 15 : 28)

## குடும்ப வாழ்வு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இங்கு குடும்ப வாழ்வு ஒரு பயணமாக மாறுகின்றது. இப்பயணத்தில் கஷ்டங்களும், சுகங்களும், இன்பங்களும், துன்பங்களும், பாதை தவறிப் போதலும், திரும்பவும் பயணத்தை புதிதாகத் தொடங்குவதும் இன்றியமையாத கட்டங்களாகின்றன. இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து வாக்குப்பண்ணப்பட்ட நாட்டுக்கு பயணமானார்கள். ஆனால் அவர்களும் பயணத்தில் இப்படியான கட்டங்களினூடாகத்தான் தாம் அடைய வேண்டிய இலக்கை அடைந்தனர். தேவைப்பட்ட போது அவர்கள் தங்களைப் புதுப்பித்து இறைவனுக்கும் தங்களுக்குமிடையே உள்ள அன்புறவைப் பலப்படுத்தி மீண்டும் தங்கள் பயணத்தை புதிதாக ஆரம்பித்தனர்.

திருமணம் என்ற இந்தப் பயணத்தில் இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றார். இப்பயணத்தில் நாம் எங்கு தங்க வேண்டும், எங்கு திரும்பி சரியான பாதையில் செல்ல வேண்டும், எப்போ நாம் பயணத்தை மேற்கொள்ள வேண்டும், என்பதை குடும்பத்தின் தலைவர்களுக்கு சொல்லிக் கொடுத்து வழிநடத்துபவர் இறைவனே. பாதையில் குழம்பிப்போய் இருக்கும் தம்பதிகளுக்கு தனது ஒளியால் தெளிவு காட்டி வழியனுப்புகின்றார். இறைவன். குடும்பத்தில் வாழும் பெற்றோர்கள், பிள்ளைகள் தங்களைப் புதுப்பித்து இப்பயணத்தை மேற்கொள்வதன் மூலம் நிறை வாழ்வை நோக்கி நாம் பயணமாகலாம்.



### எழுத்தாளர்களே!

கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதி 30-11-93ற்கு முன்னதாக எமக்கு அனுப்பி வையுங்கள். கருத்துச் செறிந்த சிறிய ஆக்கங்கள் மட்டுமே பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் புனிதமானது

★ S. A. ராஜினி, மறையாசிரியர், மாங்குளம்.

'காதல்' என்ற சொல்லின் பொருளை நம்மவர்கள் நன்கு உணராத காரணத்தால், இன்று இச்சொல் ஒரு தவறான சொல்லாகவே பலரால் கருதப் படுகிறது. உண்மையில் இது ஒரு தூய்மையான சொல்லே யாகும். தாய் தன் பிள்ளையை நேசிப்பதை 'பாசம்' என்றும், நண்பர்கள் நண்பர்களை நேசிப் பதை 'நட்பு' என்றும், மனிதர் கள் மனிதர்களை நேசிப்பதை 'அன்பு' என்றும், வறியோர் கள் மட்டில் அனுதாபம் கொள் வதைப் 'பரிவு' என்றும் கூறு வது போல, ஆண், பெண் உள்ளங்களின் அன்பைக் 'காதல்' எனும் சொல்லால் அழைக்கின்றோம்.

'கலை' என்ற சொல்லின் பெயரால் திரைப்படக் கலை ஞர்கள் காமக் களியாட்டங்கள் நடத்துவதைப் போல 'காதல்' எனும் பெயரால் இளம் உள் ளங்கள் இப்புனிதம் வாய்ந்த சொல்லிற்கு களங்கம் ஏற்படுத் தும் முறையில் நடந்து கொள் வதினால்தான், இப்புனிதம் வாய்ந்த சொல்லிற்கு இத்தகு இழிநிலையான கருத்து இன்று நம்நாட்டுமக்களில் அநேகரிடம் நிலவிவருகிறது.

காதல் இயற்கையானது. இது நாகரிகமடைந்த மக்க ளிடத்தில் மட்டும் காண்பதல்ல. நாகரிகமற்றவர் என்று கருதப் படும் மக்களிடத்திலும் இது காணப்படுவதுண்டு. ஆதிகால மக்களிடம் கூட காதல் சிறந்து விளங்கியதாக நாம் பண்டைய நூல்களில் இருந்து அறிகி றோம். காற்றுப் புகாத இடத் திலும் கூட காதல் புகுந்து விடும். இது எங்கே முளைக்கும் எங்கே வளரும் என்பதை எவ ருமே சொல்ல முடியாது. இது ஒரு காளான். எங்கும் முளைக் கும். எங்கும் வளரும். அரசன் அடிமையைக் காதலிக்கலாம். ஊழியன் இளவரசியைக் காத லிக்கலாம். பணக்காரன் ஏழை யைக் காதலிக்கலாம். காதல் எனும் தூய நெருப்பிற்கு முன்னே சாதி, சமயம், இனம், மொழி, பணம், பதவி, பட்டம் அந்தஸ்து, கௌரவம் என்பது இல்லை.

வயது வந்த ஆண், பெண் ஒருவரையொருவர் பல தடவை பார்ப்பதாலும், பேசு வதாலும் அவர்கள் உள்ளங் களில் காதல் உருவாகிறது. இக்காதல் பெரும்பாலும் முத லில் உடல் கவர்ச்சியால் முளை யிட்டு, பின்னர் உள்ளக் கவர்ச் சியால் வளருகிறது. காதல் என்பது நினைத்த மாத்திரத் தில் அழிந்து விடக்கூடிய ஓர் இலேசான நீர்க்கோலமல்ல, இது இதயத்தின் அடித்தளத் திற்கப்பாலும் ஊடுருவிச் சென்று, வேரூன்றி நிற்கும் ஒரு புனிதத்தன்மை வாய்ந்த விருட்ஷம். வானமே இடிந் தாலும், மண்ணுலகமே இரண் டாக வெடித்துப் பிளந்தாலும் கூட ஒரு காதல் ஜோடியின் உண்மைக்காதல் சிறிதளவும் சலனமடைவதில்லை. திரைப் படங்களில் காதலனும், காதலி யும் கட்டிப்புரண்டு காதல் லீலை நடத்துவதைப் போன் றுள்ளகாதல் அல்ல இக்காதல். இது அதற்கெல்லாம் அப்பாற் பட்ட புனிதக்காதல். ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டு, உண்மை அன்போடு காதலித்து மணம் முடித்த பின்னர், அவர்கள் மண வாழ்க் கையில் எத்தனை ஆண்டு களைக் கழித்தாலும், அவர்க ளிடையே ஆரம்பத்தில் இருந்த அவ் உள்ள அன்பு என்றும் குறையாது அப்படியே இறுதி வரை இருக்கும். மூப்பு என்ப தை அவர்கள் உடலில் கண்டா லும் உள்ளம் காண்பதில்லை. அத்தகைய சக்தி உண்மைக் காதலுக்கு உண்டு.

இத்தகைய சிறப்பினைச் கொண்ட காதலின் தூய்மை யை இன்றைய இளம் இதயங் கள் நன்கு உணராமல் மலர் போன்ற மெல்லிய, மென்மை மிகுந்த பொருளாகிய அதனை தங்கள் காலால் மிதிக்கிறார் கள். இளம் இதயங்கள் ஒரு வரை யொருவர் காதலிப்பதில் தவறு இல்லை. என்றாலும் காதலின் முக்கிய குறிக்கோள் என்ன என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய இளம் இதயங்களிடம் பிறக்கும் காதல் பெரும்பாலும் உடல் தொடர்பை முதன்மையாகக் கொண்டதாகவே அமைந்திருக் கிறதே ஒழிய இதயத் தொடர் பை முதன்மையாகக் கொண்ட தாகத் தெரியவில்லை. உடல் அழகுக்காக மட்டும் ஒருவன் ஒருத்தியைக் காதலித்தால், அக்காதல் இறுதிவரை நிலைக் காது. உடல் அழகுக்காக ஒருத் தியை அல்லது ஒருவனை காத லிப்பவர்களும், தங்களுடைய காம இச்சையைத் தணிக்கக் காதலிப்பவர்களும், பணத்தை நோக்கமாகக் கொண்டு காத லிப்பவர்களும் காதலின் உட் பொருளை அறிந்து கொள்ள வில்லை. எனவே உடல் அழ கைக் காட்டிலும், உள்ளத்தின் அழகையே முதன்மையாகக் கொண்டு புரியும் காதல் ஒன்று தான் உண்மைக்காதலும், இறுதிவரை நிலைக்கக்கூடிய காதலுமாக உள்ளது. நம்மில் அநேக இளம் இதயங்கள் இவ் வுண்மையை உணருவதில்லை.

(வளரும்)

## வாசகர் கருத்து

A, பிரான்சிஸ்கா
கொடிகாமம்

இன்று சில பங்குகளை நோக்குமிடத்து பல படித்த வர்கள் பக்திமான்கள் இருந்தும் ஒரு பக்திச் சபை கூட இல் லாது, ஏன் ஒரு நிரந்தர ஆலோசனைக் குழு கூட இல் லாது ஞாயிறு திருப்பலி நடந் தால் மட்டும் போதும் என்ற நிலையில் இருப்பதைக் காண முடிகின்றது. இவற்றுக்கு யார் காரணம்? பங்கின் முன்னேற் றத்துக்கு பக்திச் சபைதான் கட்டாயம் வேண்டும் என்ப தல்ல. ஆனாலும் பங்கின் வளர்ச்சி ஏணிப்படிகளில் இவைகளும் நிட்சயம் தேவை யான ஒன்றாகும். ஆகவே இப் படியான சபைகள் ஆலோச னைக் குழுக்கள் இன்னும் சில பங்குகளில் உருவாகாமல் இருப்பதற்கு யார் காரணம்?

இவற்றிற்கு விடையாக 10 - 09 - 93 அன்று வெளி யான பாதுகாவலனில் கொடுக் கப்பட்ட கருத்து பாராட்டத் தக்கது. பங்குக் குரு பங்கு மக்களை இனம் கண்டு மக்களை புரிந்து அவர்களை ஊக்குவித்து பக்திச்சபைகளை உருவாக்க வேண்டும். பங்கின் முன்னேற்றத்துக்கு வழி காட்ட வேண்டும்.

அதற்காகப் பங்குக் குருக் களை நாம் குறைகூறவில்லை. அவர்கள் சேவையைப் பாராட் டுகிறோம். எனினும் என்ன செய் வது? ''மாட்டுக்கு மாடு சொன் னால் கேளாது. மணிகட்டின மாடு சொன்னால் தான் கேட் கும்'' என்பது போல பங்கு மக்களில் பலர் திறமையுடை யவராக இருந்தாலும் அவர் கள் முன்னின்று ஒன்றை உரு வாக்கும் போது அங்கே பல பிரச்சனைகள் தோன்றுகின் றன. எனவே தான் பங்கின் முன்னேற்றத்தில் பங்கு மக் களை விட பங்குக்குரு சிறப்பி டம் வகிக்கின்றார். அதற்காக பங்குக் குரு தான் எல்லாம் செய்ய வேண்டும் என்றிராது, பங்கு மக்களும் தாமாக முன் வந்து செயற்பட வேண்டும். மக்களும் ஒருவரை ஒரு வர் மதிக்க வேண்டும். ஆகவே பங்குமக்களும் முயலவேண்டும் பங்குக் குருவும் அக்கறையோடு வழி காட்ட வேண்டும்.

## புதுப் புனலால் புதிய உதயம்

வானம் பொழிகின்ற
வனமூட்டும் புதுப்புனலால்
வையத்தின் மேனியெங்கும்
வளமான புதுப் பொலிவும்
வளர் பயிரின் புதுப்பிறப்பும்
வனப்பினை அளிக்கின்றன.
வானவன் திருக் கொடையாம்
வரமருளும் ஆவியினால்
வரண்டுள்ள உள்ளங்களில்
''வார்த்தை'' என்ற
வித்துக்களால்

புதுப் பிறப்பும்,
புதுப் பொலிவும்,
பொங்கி வரும் வெள்ளமெனப்
புதுப்புனலால் வாழ்வுபெற்று
பூரித்துச் செழித்துவர
கறையான செயலகற்றி
குறையான வழி நிறுத்தி
இறையேசு வழி
தொடர்வோம்
இகத்தில் அவர் பணி
தொடர்வோம்,

அபீர்ராஜன்
யுவானியார் பங்கு

## ஆவே மரியா

சிலுவையில் சிதறிய சிந்த னைச் செபப்புத்தகம், 15 கார ணிக்கத்துடன் செபமாலைத் தியானம், புனித ஆரோக்கிய மாதா நவநாள் புத்தகம் முத லியன விற்பனைக்குண்டு, எம் மிடம் தொடர்பு கொள்ளவும்.

புனித சிந்தாத்திரை
மாதா இல்லம்,
92, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 7<br>சுடர்: 21 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

## அம்மா

(10) *அன்புச் சேய்களின் அன்புச் சரங்கள்*

1. ''தேவ தேவன்'' கன்னி மரி வழியாகக் காசினிக்கு வந் தார். எனவே மக்கள் வான் வீட்டிற்குச் செல்ல வேண்டு மானால் அவளது வழியையே பின்பற்ற வேண்டும்.

திருமறை அறிஞர் புனித அகுஸ்தீனார்

2. மரியன்னையின் மகத்துவம் பற்றித் தினமும் நான் ஏதா வது எழுதவில்லையென்றால் என் உள்ளம் நிம்மதி யடையாது.

மரிய செல்வர் புனித பேர்னாட்

3. என் அன்புள்ள தாயைப்பற்றிய உண்மைகளை மக்களுக்கு அறிவிக்க என் இரத்தம் தேவையாக இருந்தாலும் அதை மையாக உபயோகித்து எழுதுவேன்.

புனித மோன்போர்ட்

★ ★ ★

## காவலன் களஞ்சியம்

### போட்டி விதிகள்

1. காவலன் வாசகர் அனைவரும் பங்குபற்றலாம், கண்மணிளுடன் போட்டியிடலாம்.
2. i மிகக் கூடிய புள்ளி பெறுபவருக்கு ரூ 25 பரிசாக அளிக்கப்படும்.
   ii இவ்விதமே பார்வை 2, 3 இற்கும் பரிசு அளிக்கப் படும்.
   iii மூன்று போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையில் அதி கூடிய புள்ளி பெறுபவருக்கு ரூபா 50 பரிசாக அளிக்கப்படும்.
3. விடைகளை அறிவிக்கும் பொழுது அனுப்பவும்.

### பார்வை 1

இவ்வாண்டு காவலன் இதழ் 7, 8ஐ மீண்டும் படித்து இடைவெளியை நிறைவு செய்யுங்கள்.

1. செபமாலை சொல்லும் ........................ கொள்வேன்.
2. ஆகவே இக் கல்லறைகள் ....... ........... சின்னங்களே.
3. இன்றைய நாட்களில் .................... அழைக்கின்றோம்.
4. உண்மை பேசியிருந்தால் ..................... இருந்திருக்கும்.
5. நம்மை பெயர் ...................................... நிற்கிறார்.
6. ஆனால் அவர்களின் ............................ நாசமாகின.
7. நாமும் அதனைப் ............................. கூர்கின்றோம்.
8. ஒருவன் உலகமெலாம் ......................... பயனென்ன?
9. உயிருள்ளவரை ................ ......... உயிர்த்துவிட்டார்.
10. இறைவனின் திட்டத்தில் ...................... மனிதன்.

பார்வை 1
புள்ளித்திட்டம் $5 \times 10 = 50$

அன்புக் கண்மணிகாள்!

காவலன் வாசகர், நீங்களும் திறமை மிக்கவர் என்பதை நிரூபிக்க காவலன் (7, 8) மீண்டும் படித்து விடைகளைத் தேடி நிறைவு செய்யுங்கள்.

உங்கள் அன்பின், அன்புவிழி


## செபமாலைத் தாசர் சபை அழைக்கிறது ...

இளைஞனே ! !

**உன்னை நித்தியமாக்க**
**அழைப்பின் குரல் கேட்கிறதா?**

உன் இதயத்தில் எழும் ஆசைகளே
இறை அழைத்தலின் செயற்பாடு தான்
செபமாலைத் தாசர் சபையிற் சேர்ந்து
நற்செய்தி வழி வாழ்ந்து காட்ட,
துறவியாக, குருவாக பரிணமித்துத்
தொண்டாற்ற விரும்பினால்
உடனே தொடர்பு கொள்க.

அதிபர், அருள் ஆச்சிரமம்
செபமாலைத் தாசர் சபை
5. கோயில் வீதி
யாழ்ப்பாணம்.


குறிப்பு:
பதினோராம் பன்னிரண்டாம் ஆண்டில் கல்வி கற்போர் கற்க இருப்போர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

A / 37 / 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்பக் கன்னியர் சபை

# ஸ்தாபகரின் 200வது பிறந்தநாள்



பிரான்சிய அரசியற் புரட்சியின் அபாய அலைகள் அகில உலகையும் அடித்து மோதி, அலைக்கழித்த காலம் அது. இப்புரட்சியின் விளைவாகப் புகுந்த பயங்கர ஆட்சிக்காலத்தில், பிரான்ஸ் நாட்டின் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய போர்டோவிலே 1793ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார் நம் தந்தை. இந்நாள் இவர் வரலாற்றில் 200 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மகத்தான நாள், எம்சபையின்வரலாற்றுநாள். உலகளாவிய ரீதியிலே அளப்பரிய சேவையாற்றி வரும் போர்டோவின் திருக்குடும்ப சபையை நிறுவியவர் நம் தந்தை வண. பீற்றர் பியன்வெனு நோ ஆய் அடிகள் ஆவர்.

அரசியலும் ஆன்மீகமும் ஆட்டங்கண்டிருந்த போர்க்காலச் சூழலிலே, பிரான்சிய புரட்சியின் பின்னணியிலே பல வழிகளிலும் சிதைந்து சின்னா பின்னப்பட்டிருந்த அன்றைய சமுதாயத்தையும் குடும்பங்களையும் இறைவன், பீற்றர் பியன்வெனு மூலமாக ஒன்றிணைத்து, ஒரு புதிய பாதையைத் திறக்கத் திருவுளம் கொண்டார். அவர் வாழ்ந்த அக்காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து தேவைகளைப் பூர்த்தி செய்ய இறைவன் அவரை அழைத்தார். இவர் வழியாகத் திருச்சபையிலே ஒரு புது துறவறக் குடும்பம உதயமாகியது. நசரேத்தின் திருக்குடும்பத்தின் பாதுகாவலின்கீழ் 1820ஆம் ஆண்டு போர்டோவின் திருக்குடும்பச் சபைக்கு வித்திட்டார். இந்த வித்தானது, இன்று பாரிய விருட்சமாக வளர்ந்து, உலகளாவிய ரீதியில் அட்டதிக்குகளிலும் தன் கிளைகளைப் பரப்பி பல தரப்பட்ட மக்களுக்கும் குளிர் நிழல் ஈந்து வாழ்வளிக்கிறது. ''இறைவனுக்கே மகிமை'' என்ற தாரக மந்திரம் தாங்கிய பலவர்ணக் கொடியின் கீழ் ஆதிக்கிறிஸ்தவக் குடும்பத்தின் மனப்போக்கில், இறையரசு வளர, ஆன்ம வாஞ்சையுடன் அவரது புத்திரிகள் இன்று சேவையாற்றுகின்றனர். விசுவாசத்தை ஆழப்படுத்தி, குடும்பங்களை அன்பிலே மீண்டும் ஒன்றிணைக்க அரும்பாடுபட்டு உழைக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| ★ வறுமைக்குப் | ......... ... | பகிர்வு |
| ★ அறியாமையில் | ......... ... | அறிவு |
| ★ நோய்நொடியில் | ............... | ஆறுதல் |
| ★ அநாதைகளுக்கு | ...... ...... | வாழ்வு |
| ★ ஒடுக்கப்பட்டோர்க்கு | ............ | உயர்வு |
| ★ துன்புற்றோர்க்கு | ............ | மகிழ்வு |
| ★ தாழ்வுற்றோர்க்கு | ............ | மலர்வு |
| ★ மனமுடைந்தோர்க்கு | ............ | நம்பிக்கை |

என்ற விவித பணிகளில் — சபை நிறுவினரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அரும் பெரும் சேவையாற்றுகின்றனர்.

இவ்வாறாக இன்று, வானளாவ ஓங்கி வளர்ந்த சபையின் கிளைகளிலே விவித இனம், மொழி, கலை, கலாச்சாரங்களிலே வர்ணப் பட்சிசாலங்கள் தங்கியிருந்து 'இறைவனுக்கே மகிமை' என்ற பண்ணிசைத்து திருச்சபை வழியாக உலகின் முகத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றன.

அவரது புத்திரிகளாகிய
நாம் — எம் நிறுவனர் வழி நடந்திட
இறைபுகழ் என்றும் பாடிட
இறைவனுக்கே என்றும் மகிமை அளித்திட
இறைவா! உம்மைப் போற்றுகின்றோம்
உம்மைப் புகழுகின்றோம்
நன்றி கூறுகின்றோம்



'' எங்கள் திருக்குடும்பமே நீ வாழ்க!
அகிலம் எங்கும் அணியாய்த்
துலங்கும்
உயர் குடும்பமே நீ வாழ்க!''

## கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சி

ஆசியாவில் கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒன்றிப்பை வளர்த்து நற்செய்திப்பணியை முடித்து விடும் நோக்கில் கிறிஸ்தவ சபையின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்படவேண்டுமென்று ஆசிய கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந் பிரதிநிதிகள் பரிந்துரைத்துள்ளனர்.

தாய்லாந்தில், அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட 21 பிரதிநிதிகள் இப்பரிந்துரையை முன் வைத்தனர்.

1995ஆம் ஆண்டில் ஆசிய ஆயர் பேரவையின் கூட்டிணைப்பில் மற்றும் கிறிஸ்தவ சபையினர் நடத்தவிருக்கும் கூட்டங்களில் இப் பரிந்துரை சமர்ப்பிக்கப்படும்.

ஆசியாவில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் செயற்படுத்தப்படுவதற்கு ஆசிய கத்தோலிக்க ஆயர்களும் பிற கிறிஸ்தவ சபைத் தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் இப் பரிந்துரை விண்ணப்பிக்கின்றது.

## பெண்களுக்கான ஓர் அமைப்பு - உதயதாரகை உதயமாயிற்று

பெண்கள் முன்னேற்றத்திற்கான ''உதயதாரகை'' எனும் நிறுவனம் பலவித தேவைகள் மத்தியில் 29-09-93 அன்று கடற்கரை வீதியிலுள்ள திருச்சிலுவை கன்னியர் மடத்தில் உதயமாயிற்று. இதன் அமைப்பாளர் அருட்செல்வி நீற்றா (தி.சி.க) அவர்கள் பெரும் சிரமங்கள் தாமதங்கள் மத்தியில் இதனை அமைத்துள்ளார். இதன் போஷகராக அருட்செல்வி செலீன் (தி.சி.க) இருக்க முன்வந்துள்ளார். உப தலைவராக செல்வி நிக்கலீன் சாமிநாதரும், செயலாளராக செல்வி எழிலரசி யேசுதாசனும் உபசெயலராக திருமதி யேசுதாசன் யூலியற்றும், பொருளாளராக செல்வி நிர்மலா அன்ரனிப்பிள்ளையும், உப பொருளாளராக திருமதி விஜயநாதன் றெபேக்காவும் இந்நிறுவனத்தில் அங்கம் வகித்துள்ளனர்.

இந்நிலையமானது யாழ்நகரில் அரசியல் சார்பற்ற பெண்ணின் ஓர் அமைப்பாக இருக்கின்றது இந்நிலையம் இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தவறுகளை அறவழி மூலம் நிவர்த்தி செய்து துயர்துடைக்க முன்வந்துள்ளதுடன் குறுகியகால நிவாரணங்களைக் காட்டிலும் நெடுங்கால நிவாரணங்களே பயனுடையதாக அமையும் என்பதை மனதிற் கொண்டு தன் செயற்திட்டத்தை வகுத்துள்ளது.

உதாரணமாக பெண்களுக்கான சமூகப்பிரஞ்ஞையை வளர்த்தல், தொடர்பு உறவு நிலைகளை உருவாக்கல், கல்வி மேம்பாடு பொருளாதார ரீதியில் பெண்கள் அடையும் பின்னடைவுகளை துணிச்சலுடன் எதிர் நோக்க ஈடுசெய்ய அவர்களைத் தயார்படுத்தல் (சிறு கைத்தொழில், குடிசைக்கைத் தொழில், முதியோர் முறைசாராக் கல்வித்திட்டம்) என்பன இந்நிலையத்தின் நோக்கங்களில் சிலவாகும்.

கடின உழைப்பும் அஞ்சா நோக்கும், சேவைமனப்பான்மையும் கொண்ட பெண்கள் இந்நிலையத்துடன் இணைந்து செயலாற்ற அழைக்கப்படுகின்றனர். எமது நிலையத்தின் நோக்கம் பரந்த அளவாக இருப்பதால் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மூன்றுமாதம் வார இறுதிநாள்களில் பயிற்சி ஒன்றைப் பெறவேண்டியவர்களாக உள்ளனர். இப்பயிற்சி நெறியில் உளவள பயிற்சிகள் கணிப்பீடுகள் சேகரித்தலும் அவற்றை ஆய்வு செய்தலும், முகாமைத்துவம், தலைமைத்துவம், பொருளாதாரம், தனிநபர் உரிமைகளும் அவற்றைப்பாதுகாத்தலும், ஆன்மீகரீதியான பயிற்சிகள் என்பன இடம் பெறும்.

இப்பயிற்சி நெறியானது இலவசமாக வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் நிரந்தர அங்கத்துவ உறுப்புரிமைகளும் வழங்கப்படும். பெண்கள் இந்நிலையத்தில் இணைந்து கொள்வதன் மூலம் தமது சமூக உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், குடும்பம் எனும் சிறிய வட்டத்துள் வாழாது ஒவ்வொரு பெண்ணும் ஏனைய பெண்களுடன் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு தமது வாழ்வை வளம்படுத்தவும் ஒருவருக்கு ஒருவர் உந்து சக்தியாக இருக்கவும் இந்நிலையம் மிக உதவியாக இருக்கும். எனவே சேவை மனப்பான்மை கொண்ட பெண்கள் தங்கள் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொண்டு எம்முடன் இணைந்து கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

பெண்ணே! அடுப்படியில் துயின்றது போதும், விழித்தெழு!
முழு உலகமும் உனை எதிர் நோக்கிக் காத்திருக்கிறது
செயற்கரியன செய்ய !

செல்வி எழிலரசி.யே
(செயலாளர்)

தொடர்பு கொள்ளும் முகவரி
அருட் செல்வி நீற்றா
பெண்கள் முன்னேற்றநிலையம்
திருச்சிலுவை கன்னியர் மடம்
கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.

# செய்திச் சாறு

★ ஒக்ரோபர் 16 ஆம் திகதி சிறப்பிக்கப்படும் உலக உணவு தினம் இவ்வாண்டு ஒரு நாள் முன்னதாகச் சிறப்பிக்கப்படுகின்றது.

★ இவ்வாண்டிற்கான நோபல் அமைதிக்கான விருது தென்னாபிரிக்கத் தலைவர் S.W.G கிளெக்கும், A.N.C கூட்டுத்தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கும் வழங்கப்படுவதாக அறிவித்தது நோர்வே விருதுக்கழகம்.

★ மொசாம்பிக்கின் 6 அண்டைநாடுகளிலுள்ள ஏறத்தாழ 13 லட்சம் மொசாம்பிக் அகதிகளை தாயகத்தில் குடியமர்த்தும் 3 ஆண்டுத் திட்டப்பணியைத் தொடங்கியுள்ளது U.N.H C.R.

★ உலகில் அதிகரித்து வரும் அகதிகளைப் பாதுகாப்பதற்கான தன் முயற்சிகளைச் சர்வதேச சமுதாயம் மேலும் வலுப்படுத்த வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளார் வத்திக்கானின் உயர் அதிகாரி ஒருவர்.

★ ஐ. நாட்டின் நிறுவனத்தின் அமைதி காக்கும் பணிகளுக்கென இலங்கை தன் காவற் துறையினரை விரைவில் அனுப்பும் என்று காவற்துறையின் உயர் அதிகாரி சற்குணராஜா கூறினார்!

## துணிவான வேண்டுகோள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் அரசியல் தலைவர்களிடத்தில் மக்களது நம்பிக்கை தளர்ந்துபோகும் இவ்வேளையில், இந்நீடித்த போரின் விளைவாகத் துன்புறும் மக்களின் வேணவாக்களுக்கு தெளிவான, உரத்த குரல்கொடுக்கவும், போரை நிறுத்தி போரிடும் இருதரப்பினரையும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு கொண்டு வரவும் வேண்டியவர்கள் இந்நாட்டின் மதத் தலைவர்களே. நாட்டின் சமாதானத்துக்காக இடையீட்டாளராக இருந்து இறைவாக்குப் பணிபுரியும்படி என்றுமே பெரிய சவால் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையினருக்கு மிதமிஞ்சிய தூபமிடுவதால்தான் கிறிஸ்தவர்கள் இந்நாட்டில் பிழைக்கலாம் என்று எண்ணி நாம் நம்மை ஏமாற்றலாகாது. இவ் இறுதி நேரத்திலாவது நாம் எமது இறைவாக்குரைக்கும் துணிவுடன் யாவருக்கும் விடுதலையளிக்கும் உண்மையை உரைப்போமாக என அறைகூவல் விடுத்தார் அதிபர் அவர்கள்.

அதிபரின் அறிக்கையின் பின் சிறப்புக் ''குறுங்குரை'' யாக அருள் தந்தை S. J. இராசநாயகம் M. A. அடிகளார் ''திருமணம் ஒரு பயணம்'' எனும் தலைப்பில் அரிய கருத்துக்களை வழங்கினார்.

## அருங்கொடைத் தியானம்

இத்தாலி நாட்டில் அசிசி மாநகரில் அகில உலக அருங்கொடைத் தியானம் செப்ரெம்பர் 13 ஆம் திகதி திங்கள் காலை 9மணி முதல் 17ஆம் திகதி வெள்ளி மாலை 8மணி வரை நடைபெற்றது.

உலகின் பல்வேறு நாடிகளிலிருந்து 1500க்கும் அதிகமான தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆண்டவன் இயேசுவின் நற்செய்தியை ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியினால் அபிசேகம் செய்யப்பட்டார்கள். அத்தனை பேரும் ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்கு கொண்டு பாவத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டார்கள்.

அதன் பின் திருப்பலியில் நூற்றுக்கணக்கானோர் உடல், உள வியாதிகளில் இருந்து சுகப்பட்டார்கள்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் [illegible] யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1993 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது இல. B/Q.1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org